# சித்தர் இலக்கியங்களில் ‘கடவுள்’ தத்துவக் கோட்பாடுகள்

35

**முனைவர். ஏ.சாந்தகுமார்,**

**பட்டதாரி ஆசிரியர், தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளி,**

**தேவகோட்டை, சிவகங்கை மாவட்டம் - 630 303, தமிழ் நாடு.**

**மின்னஞ்சல்: santhakumar22061977@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில், ‘சில்’ என்ற வேர்ச்சொல்லிருந்து விரிந்த சொல்லே சில +து +அர் என்ற சித்தர்கள் என்ற பொதுச் சொல் ஆகும். சில் என்பதற்கு சிறிய, மிகச் சிறிய, நுட்பமான என்று பொருள்படுவதாக மொழியியல் அறிஞர் தக்கர் (முனைவர்) ம.சோ.விக்டர் கூறுகிறார். சித்தர்கள் மருத்துவம், வானியல், கணக்கியல், உடற்கூற்றியல், அணுவியல், பேரண்டத் தோற்றம் குறித்து சித்தர் இலக்கியப் பாடல்களில் விளக்கியுள்ளனர். ‘கடவுள்’ என்பது மனித தன்மையில் உயர்நிலையடைந்தோரை உணர்த்துவது. மனிதனாகப் பிறந்து முழு மனிதராக வாழ்ந்தவர்களே ‘பெரியோர்’ஆவர். அவர்கள் ‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான்புகழ் எய்தியவர்கள்’ வான் மேல் வாழும் கடவுளர் ஆவர். தன்னையறிந்தால் தலைவனாகலாம் என்ற ‘பதி’ நிலையை தெய்வ நிலையை அடைந்த ‘ஆசான்’ ‘அறிவர்’ ‘சித்தர்’ போன்றோரைக் குறிக்கிறது. சித்தர்கள் கடவுளையும் தங்களின் பகுத்தறிவுக்கு உட்படுத்தினார்கள். ‘கடவுள் தத்துவம்’ பகுத்தனர். ‘காற்றே கடவுள், ஒளியே கடவுள், ஒருவனே கடவுள், அன்பே கடவுள், அறிவே கடவுள், அம்மையப்பனே கடவுள்’ என்று பதினெண் சித்தர் பாடல்கள் வழியாக இயற்கையின் உயிர் இயங்கியலின் சார்பியல் கோட்பாடு வழியாக அறியமுடிகிறது.

**திறவுச் சொற்கள் :** சில், சித்தர்கள், பெரிய ஞானக் கோவை, கடவுள், பெரியோர், வாலை, ழ, சித்ரா, சரவியல், சுழுமுனை.

**முன்னுரை**

சித்த மருத்துவப் பிரிவில் ஒன்றான ‘மர்ம (வர்ம)’ மருத்துவத்தில் உயிர் காற்று நாடி இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. உயிர், உடல், மனதின் இயக்கம் அனைத்திற்கும் மூலகாரணக காற்று இருக்கிறது. உயிர்க் காற்றான (ஆக்சிஜன், பிராணவம்) உயிர் - மெய்ப் புனலில் கட + உள் ‘கடவுள்’ ஆகிறது. ‘கடவுள்’ என்ற சொல்லுக்கு பல கருத்துக்களை பொருளாகக் கொண்டாலும், தமிழரின் வாழ்வியல் மதிப்பீட்டின் அடிப்படையில் கடவுள் என்பது உயர்நிலையடைந்தோரை உணர்த்துவது. ‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

வான்புகழ் எய்தியவர்களை' 'ஆசான்' 'அறிவர்' 'சித்தர்' என்று இந்த ஆய்வுக் கட்டுரையின் பொருளாக எடுக்கிறது. 'கடவுள் தத்துவம்' என்ற தலைப்பில் 'தன்னையறியும்' பகுத்தறிவு சிந்தனையாக 'காற்றே கடவுள், ஒளியே கடவுள், ஒருவனே கடவுள், அன்பே கடவுள், அறிவே கடவுள், அம்மையப்பனே கடவுள்' என்ற பொருண்மையின் அடிப்படையில் சித்தர் பாடல்களின் மய்யக் கருப்பொருளை பகுத்தும் தொகுத்தும் பார்க்கிறது.

**காற்றே கடவுள்**

'நீரின்றி அமையாது உலகு' என்கிறார் அய்யன் வள்ளுவர். நாம் உணவின்றி 40 நாட்கள் வாழலாம். நீரின்றி மூன்று நாட்கள் வாழலாம். ஆனால், காற்றின்றி மூன்று நிமிடம் கூட தாக்குப் பிடித்துவாழ முடியாது. உயிரினம் வாழ்வதற்குக் காற்று உட்கொள்ளுவது அல்லது உறிஞ்சுவது வெளியேற்றுவது அவசியம். இயற்கையாக மனிதன் மூக்கின் வழியாகவே காற்றை உறிஞ்சுகிறான். அவனது இடப் பக்க மூக்கு துவாரம் 'இடகலை' என்றும், வலப்பக்க மூக்கு துவாரம் 'வலகலை' என்றும், இரண்டு மூக்குத் துவாரத்தின் வழியாக சீராண காற்றின் இயங்குவது 'சுழுமுனை' என்பர். அதனை 'ஆண் பாகம்', 'பெண் பாகம்', 'அலி பாகம்' என்று பகுப்பர். இயல்பில் பொதுப் பண்பும், சிறப்புப் பண்பும் காணப்படுகிறது. (அர்த்த நாரீஸ்வரராக உருவகப்படுத்துவர்). தாவர வகை, விலங்கு வகை (மனிதன் உட்பட), கோள்கள், கற்கள் அனைத்தும் மூன்றாகப் பகுப்பர். அதாவது, 'ஆண்மிகிலானாம் பெண்மிகற் பெண்ணாகும் / பூணும் இரண்டொன்றிப் பொருந்தியலலியாகும் / தாண்மிக்கவாயின் தரணிமுழூதாளும் / பாண்மை மிகுந்திடிற் பாய்ந்தது மில்லையே' (திருமூலர், கருக்கிடை வைத்தியம் - 600). திருமூலச் சித்தர் பாடலில் ஆண், பெண், அலி மரத்தின் தன்மைகள் கூறப்பட்டுள்ளன. ஆண் மரமானது தூண் போன்றும், பெண் மரமானது அடி பெருத்தும் நூனியானது சிறுத்து போன்றும், அலி மரமானது கீழே சிறுத்தும் மேலே தலை பெருத்தது போன்றும் இருக்கும். நெருப்பு எரிவதற்குத் தேவையான உயிர் வளிக் காற்றை மரங்களிடமிருந்து பெறுகிறது. அதுபோல, விலங்குகளும், மனிதர்களும் பெறுகின்றனர். (சூரிய ஒளி, ஓசோன், ஆக்சிஜன், கார்பன்டை ஆக்சைடு சார்பியல் தன்மை காணப்படுகிறது).

ஓகவியலுக்கு அடிப்படை உத்தியான சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்று முக்கிய நாடிகள் ஓடுகின்றன. சரக்கலையில் (மூச்சுக் காற்று) சூரியன், வலது நாசி, சூடு என்றும், சந்திரன், இடது நாசி, குளிர்ச்சி என்றும், அக்கினி கலையில் இருநாசி (சுழி முனை), நடு நிலை (நாடி) என்றும் சித்தர்கள் பகுப்பர். அண்டத்தில் இரவி, மதி, சுடராகிய முச்சுடர் இருக்கிறது என்பதை சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன. (அண்டத்திலும் பிண்டத்திலும் ஒத்ததிர்வு உராய்வு விசை, சவ்வுடு

பரவலின் வழியாகத் தொடர்பு கொள்கிறது). 'அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன்றாகி' (கோவிந்தன். தா., காகபுசுண்டர், பா.63). 'கோணமற் சுழுமுனையில் மனத்தை வைத்து / தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன் றாகும்' (மேலது., ) என்கிறார் காகபுசுண்டச் சித்தர். 'முச்சுடரான விளக்கினுள் ளேமூல / மண்டல வாசி வழக்கத்திலே / எச்சுட ராகி யந்தச் சுடர் வாலை / இவள் விடவேறில்லை வாலைப் பெண்ணே' / (கோவிந்தன். தா.,) என்கிறார் கொங்கணச் சித்தர். எட்டிரண்டு மென்றுமது வாலை யென்பார் / இதுதானே பரிதிமதி சுழுமுனை யென்பார் / ஓட்டிமுறிந் தெழுந்ததுமுக் கோண மென்பார் / உதித்தெழுந்த மூன்றெழுத்தை யறியாரையோ / வந்ததடா ரவிமதியுஞ் சுடர்மூன் றாகி / கபாலத்தின் முக்கூறாய்ச் சுழுமுனை யாச்சு / வீரப்பா காதுக்கும் நாக்குக் குந்தான் (கோவிந்தன். தா., காகபுசுண்டர், பா.2). வாலையான குண்டலினியைவிட மேலான தெய்வமில்லை என்பதைக் கொங்கணச் சித்தர், 'வாலைக்கு மேலான தெய்வமில்லை' என்று பாடுகின்றார்.

**ஒளியே கடவுள்**

'நெருப்பின்றி புகையில்லை' என்ற பழமொழியில், நெருப்புக்கும் புகைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. நெருப்பு தொடர்ந்து எரிவாற்கு காற்று காரணமாகிறது. காற்றின்றி நெருப்பு எரியாது. காற்று எரிதலுக்குத் துணை புரிகிறது. காற்று வெற்றிடமானால் நெருப்பு எரியாது. ஆகவே. காற்றுடல் என்பது 'ஒளி உடல்' (ஆரா - தேஜேஸ்) வடிவில் இயங்குகிறது. ஒளியாம் கடவுளை 'சோதி' (ஜோதி) என்று சித்தர்கள் பலரும் குறித்தனர். கடவுளை கோயிலின் உள்ளேயும் வெளியேயும் காணாமல் உத்தமர் தம் உடம்பிற்குள்ளே கடவுளைக் கண்டனர். பாம்பாட்டிச் சித்தர் பாடலில் ஜோதி பற்றிய கருத்தில், 'தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடி மின்னற் கொடியென் றுஞ் ஜோதி விளக்கமென்றும்' இடைக்காட்டுச் சித்தர் பாடலில், 'காலா காலங் கடந்திடு சோதியைப் போற்றக்கால் பரஞ்சோதியைக் கண்டோமெனத் தும்பீபற' என்றும், அகத்தியரின் ஞானப் பாடலில், 'ஞான முள்ள யெந்திரமாஞ் ஜோதி தன்னை என்றும்', சித்தர் தேரையர் (இராம தேவர், யாக்கோப்பு) பாடலில் 'நீதி யென்றி பரஞ்சோதி ஆயி பாதம் நாயகி யான் பரஞ்சோதி நாட்டமுற்றுத் இன்னமின்னங்கண் முன் சோதிணையுமாகு' என்றும், கொங்கணரின் வாலைக்கும்மி பாடலில், 'ஞானப் பெண்ணாம் அருள் சோதிப் பெண்ணாமாத நந்தவனத்திலே சோதி யுண்டு' என்றும், திருமூலச் சித்தர் பாடலில், 'படிகடந்த பரஞ்சோதிப் பதியுமாகிப் அளவரிய சோதி யது தானேயாக மூச்சுடருந்தானகி முடிந்த சோதி விகர்ப்பமில்லா மூலமதில் நின்ற சோதி' என்றும், சட்டை முனி சித்தர் பாடலில், 'அப்புரத்தே தோற்றுகின்ற சோதியேது கூடினதோர கண்டத்தின் சோதி யெங்கே சோதி யென்று பராபத்தி லாறு வரையுண்டு'

கூறுகிறார். 'வாசி நடு மையத்துள் வாழ்வார் தாமே முச்சுடரு முக்கொண மூன்றுனாடி மனோன்மணியாம் புருவமையத் தூடே சென்று' என்று பாடல்கள் சான்றுகள் தருகின்றன.

'எண் ஜான் உடலுக்கு தலையே முதன்மையானது' என்ற பழமொழிக்கு பொருளாக வெளிக் காற்றான உயிர் வளிக் காற்றை அதிக அளவில் ஏறக்குறைய 70 முதல் 80 சதவிகிதம் மூளையானது எடுத்துக் கொள்கிறது. 'சோதி' ஆற்றலின் மூளைத் தளம் (சிற்றண்டம்) ஆகும். இப்பேரண்டம் மிகப்பெரிய வெப்ப அணு உலைக்களத்தின் இயக்கம் போல மனித உடலின் உயிர் ஆற்றலின் தளமாக மனித தலையில் ஓங்கார மூளைத் தளம், பெருமூளை பின்புறம் கீழமைந்துள்ள பீனியல் சுரப்பி இருக்கிறது. ஆக்ஞா சக்கரம் மனித உடல் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளது. சிறுமூளையின் பின்புறமுள்ள பிட்யூட்டரியை சகஸ்தாரதளம் என்பர். இந்த சுரப்பி மற்ற நாளமில்லா உடல் சுரப்பிகளையும், உடல் உறுப்புகளையும் இயக்கும் ஆற்றலாக உள்ளது. இதுவே 'மூலமாம் கடவுள்'. உச்சிக் குழிக்கு கீழே உள்நாக்கிற்கு மேலே கட + வுள் ஜோதியானது ஓங்கார மூளையின் மீது பிறை போன்ற பகர வடிவக் குழியொன்று இருக்கிறது. சுழிமுனை உள்ளே காலியாக இருக்கும் 'சித்ரா' எனப்படும் பகுதியில் தெய்வ சக்தி உள்ளது (வேலுசாமி, ப.29).

இதனை சித்தர்கள் பலரும் சான்று பகர்கிறது. குதம்பைச் சித்தர் பாடலில், 'உச்சியில் ஓங்கி ஒளி திகழ் நாதத்தை நச்சியே இன்பங்கொள்வார்க்கு நமன் இல்லை விச்சும் வரிசுடர் மூன்றும் உலகுக்குத் தச்சும் அவனே சமைக்கவல்லாண்' மேலும், 'உச்சிக்கு மேற் சென்றுயர் வெளி கண்டோர்க்கு அண்ணாக்கின் வட்டத்துள்ளாகும் பாரே உச்சிக்குக் கீழடியோ ஊசிமுனை வாசலுக்கு உச்சிக்கு மேற்சென்று உயர்வெளி கண்டோர்க்கு' மேற்கண்ட பாடலின் கருத்தை கொங்கணச் சித்தரும் வழியுறுத்துகிறார். தலை ஓட்டின் உச்சிக் குழிக்கு கீழே உள்நாக்கிற்கு மேலே கடவுள் வாழும் இடமாக, 'உச்சிக்கு நேரயுண்ணாவுக்கு மேல் நிதம் வைத்த விளக்கும் எரியுதடி' வாயைத் திறந்தால் தெரியக்கூடிய அண்ணாக்கு என்னும் ஜோதி மலை அமுதம் ஊறக்கூடிய உள்நாக்குப் பகுதி (தமிழில் சிறப்பு 'ழ' வை நாக்கு தொடும் பகுதி) ஆகும். தலையின் மண்டை ஒட்டின் உச்சியிலிருந்து அமுதம் வயிறு நோக்கி கண்டத்தில் வழிந்து வயிற்றின் உட்புறம் செல்வதைக் கேசரி முத்திரைப் பயிற்சியால் வழிந்தோடும் அமிர்தம் நிறுத்தப்படும். இதனால் பசி தாகம் இல்லாத மனம் குவிந்தநிலை வரும். இந்நிலையே சித்தர்களின் சமாதி நிலையாகும். தலை உச்சியின் நடுவே நுழைந்து உள்நாக்கு இருப்பதற்குமேல் என்றும் அணையாதபடி ஓர் ஒளி விளக்கு எரிந்தபடி உள்ளது. இதுவே 'வாலை' என்னும் கடவுள் திருநிலையாகும். இதுவே உடலில் 'சோதி தரிசனம்' என்பர்.

**ஒருவனே கடவுள்**

‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ என்ற திருமூலரின் வாக்கிற்கு ‘மக்கள் அனைவரும் சமம்’ என்ற குடிமைக் கோட்பாட்டை உணர்த்துகிறார். சாதி பேதங்கள் சொல்பவர்கள் தெய்வம் குடிகொள்ளும் உடலான கோயிலில் வேறுபாடுண்டா என்று கேட்கிறார் கொங்கணச் சித்தர் (கோவிந்தன். தா.,). கோயில் எங்கும் ஒன்றலோ, குளங்கள் நீர்கள் ஒன்றலோ? உங்கள் தெய்வ மெங்கள்தெய்வ முண்டெளவும் வேறுசெய்து அங்கங்கள் வேறுளதா யாகமங்க ளுற்பவித்தார் பங்கமதாய் வேறுசெய்யும் பாதகரேய எங்குமிங்கும் எங்குகெங்கு மாய்நிறைந்த ஈசனென் றறிகிலீரே.

தனித்தனியான கோயில், குளம், தெய்வம், ஆகமங்கள் என்று பாகுபாடு செய்பவர்கள் கேளுங்கள், பதியானது அனைத்து அண்டங்களிலும் இருக்கின்ற அத்தனை அணுக்களிலும் கலந்திருக்கிறது. அதே நேரத்தில் அவற்றைக் கடந்தும் இருக்கிறது. அண்டங்களிலுள்ள எல்லா அணுக்களிலும் ‘பதி’ கலந்திருந்தாலும், அது ஒன்றே ஒன்றுதான். (நவீன அறிவியலில் ஊடகமாக போட்டான் உலகெங்கும் பரவியிருக்கிறது. இதுவே சித்தர்களின் இயற்கை அறிவியல் கொள்கையாகும்).

-------------- ., ANATOMY (VOL – 1 and 2) (Trans.) (1985) Mir Pub. : Moscow.

‘The Central Nervous System’, P. 339.



Figure 75. Diagram of chief connections between the subcortex and the limbic



**அன்பே கடவுள்**

இவ்வுலகமானது ‘ஆண், பெண்’ என்ற ‘இறைவன், இறைவி’ என்ற இரு பால் மூலகங்களின் அன்பிணைப்பால் (பெரு வெடிப்பு - முரண்படும் இயக்கம்) உடல் - உயிர் உறவால் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வுலகம் அன்பினால்தான் இயங்குகிறது என்பதை, ‘அன்பே கடவுள்’ வடிவமாக இருக்கிறது. உலகை இயக்கும் அச்சாணியின் மய்யம் அன்பைச் சார்ந்திருக்கிறது. இடைக்காடார் சித்தர் பாடலில், ‘ஆரண மூலத்தை அன்புடனேபர / பூரணமாகவே சிந்தித்து’ / (கோவிந்தன், பா. 5). மூலமான கடவுளை அன்புடன் முழுமையாகச் சிந்தித்து ஒழுகி வாழ்க. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை மனதில் நினைக்க வேண்டும் என்று கூறுகிறார். சிவவாக்கியார் சித்தர் பாடல் கூற்றில், ‘அன்பருக்குள் அன்பராய் நிற்பன்ஆதி வீரனே / அன்பருக்குள் அன்பராய் நின்றஆதி நாயனே / உம்பருக்கு உண்மையாய் நின்ற உண்மை உண்மையே’ (கோவிந்தன். தா.,). அன்பர்களுக்கு அன்பனே, முதன்மையானவனே. உன் பக்கத்தில் உண்மையாய் கொண்ட அன்பே என்றும் உண்மையாக அழியாமல் இருக்கும் என்கிறார். பாம்பாட்டிச் சித்தர் பாடலில், ‘எள்ளில் எண்ணெய் போலவுயிர் எங்கும் நிறைந்த ஃ ஈசன்பத வாசமலர் எண்ணி எண்ணியே / உள்ளபடி அன்புபக்தி ஓங்கி நிற்கவே / ஒழுங்கி யடங்கித் தெளிந்து ஆடுபாம்பே’ / (மேலது.,). அதாவது, எள்ளுக்குள் நிறைந்திருக்கும் எண்ணெய் போன்று, உயிரெங்கும் நிறைந்த ஈசனின் திருவடி மலர்களை நினைத்து, உண்மையான அன்பும் பக்தியும் பெருகி நிற்கும்படி அடக்கமுடன் தெளிந்து பாம்பே நீ ஆடுவாயாக. (எள்ளைச் செதுக்கிவிட்டு ஆட்டினால்தான் கடவுளைக் காணமுடியும்). மேலும், ‘அண்டபிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை / அகலாமலே நினைத்தே அன்புடன் பணிந்து / எண்திசையும் புகழ்ந்திட ஏந்தி ஏந்தியே / ஏகமன மாகநாடி ஆடு பாம்பே’ (மேலது.,). அண்ட பிண்டம் இவ்விரண்டையும் ஒன்றாக இணையும்படி படைத்த எங்கள் ஆதி தேவனை நீங்காமல் நினைத்து அன்புடன் பணிந்து எட்டுத் திசைகளும் புகழும்படி வாழ்த்தி அவனை மட்டுமே ஒரு மனதாக நினைத்து பாம்பே, நீ ஆடுவாயாக என்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

**அறிவே கடவுள்**

‘சோதி’ என்பது அறிவின் ஒளியைக் குறிப்பதாகும். ‘பக்குவப்பட்ட நல்ல அறிவினால் பாவம் போகும். இளமையான அன்னமே’ என்று இடைக்காடர் கூறுகிறார். ‘பக்குநல் அறிவாலே பாவம்போம் மடவனமே உயிரிருந்து எவ்விடம்? உடம்பெடுத்தன் மூலம்? உயிரதாவது ஏதடா? உடம்பதாவது ஏதடா? உயிரையும் உடம்பையும் ஒன்றிவிப்பது ஏதடா? உயிரினால்

உடம்பெடுத்த உண்மைஞானி சொல்லடா?' (கோவிந்தன். தா.,). உடல் தோன்றுவதற்கு முன்பு இந்த உயிர் எங்கே இருந்தது? உடம்பும் உயிரும் சேர்வதற்கு முன்பு உயிருக்கும் உடம்பிற்கும் அடையாளம் இருந்ததா? அவ்வாறு தொடர்பில்லாமல் இருந்த இரண்டையும் ஒன்றுபடுத்தியது எது? உயிருக்குத் தான் இயங்க ஓர் உடம்பு தேவைப்பட்டது. இவ்வுயிரினால் உடம்பைப் பெற்ற ஞானியே நீர் கூறுவீராக என்கிறார் சிவவாக்கிய சித்தர். 'கருத்தறிப்ப தற்குமுன் காயம்நின்றது எவ்விடம்? உருத்தரிப்ப தற்குமுன் உயிர்ப்பு நின்றது எவ்விடம்? மருட்பொதிந்த சிந்தையில் மயக்கம் நின்றது எவ்விடம்? விருப்புணர்ந்த ஞானிகள் விரித்துரைக்க வேணுமே' (மேலது.,). கருவில் உருவான உடல், அதற்கு முன்பு எங்கிருந்தது? கருவானது உருவான பின்பு உண்டான உணர்வு அதற்கு முன்பு எங்கிருந்தது? அருள் உணர்வு சிறந்து விளங்;கும் சிந்ததையில் குழப்பம் உண்டாகிறதே, அது அதற்கு முன்பு எங்கிருந்தது? இக்கேள்விகளுக்கெல்லாம் தெளிவான விடை தெரிந்த ஞானிகளே இவற்றை எங்களுக்கு விரிவாக எடுத்துக் கூறுவீராக என்று கேள்விக்கனைகளைத் தொடுக்கிறார் சிவவாக்கியார். (ஊழ் விதியின்படியே நடக்கும். வளி மண்டலத்தின் காற்றழுத்தம் தீர்மானிக்கிறது).

**அம்மையப்பனே கடவுள்**

உலகில் எவராலும் படைக்கப்படாத பரம்பொருள் ஒன்றே கடவுள் ஆவார். தந்தையும் தாயும் இணைந்து மகிழும்போது, நான் கருவாகி, உருவாகக் காரணமான கடவுளை வணங்குவேன் என்கிறார்கள் சித்தர்கள். கொங்கணச்சித்தரின் பாடலில், 'தானென்ற தானே தா னொன்றே தெய்வம் தகப்பனுந் தாயுமங்கே புணரும் போது நானென்று கருப் பிடித்துக் கொண்டு வந்த நாதனை நீ எந்நாளும் வணங்கி நில்லு வாலைக்கு மேலான தெய்வமில்லை' (கோவிந்தன். தா.,). ஒரு குழந்தை இந்த மண்ணில் புதிதாகப் பிறப்பதற்குத் தாய் - தகப்பனிடையே உறவு வேண்டும். அது காமமாக இருந்தாலும் சரி காதலாக இருந்தாலும் சரி அங்கு கலவி என்ற இருபால் கூடல் தேவை. கருவான குழந்தை பிறப்பதற்கு வாலையாம் குண்டலினி ஆற்றலின் எழுச்சி தேவை. அறிவியல் அடிப்படையில் வளி மண்டலத்தின் அழுத்தம் சேயின் உயிரைத் தீர்மானிக்கிறது. 'வாலைக்கு மேலான கடவுள் இல்லை ஈன்றதாயும் அப்பனும் இயங்குகின்ற நாதமாய்' (மேலது.,). மேலும், 'ஆயனை அரனையும் அறிந்துணர்ந்து கொள்விரேல் தாயினும் தகப்பனோடு தான் அமர்ந்தது ஒக்குமே அம்மையப்பன் அப்பன்நீர் அமர்ந்தபோது அறிகிலீர்' (மேலது.,). (தற்காலங்களில் வாடகைத் தாய் அமர்த்துதல் மற்றும் சோதனைக் குழாய் வழியாக குழந்தையைப் பிறக்கச் செய்கின்றனர். இது அவ்வாறு அல்லாமல் இயற்கையான வழியில் குழந்தை பெறும் வழியைக் குறிக்கிறது. மேலும், ஓக நிலையைக் குறிப்பதாகவும் அமைகிறது).

**முடிவுரை**

தமிழில், 'சில்' என்ற வேர்ச்சொல்லிருந்து விரிந்த சொல்லே சித்தர்கள் (பொதுச் சொல்) ஆகும். சிறிய, மிகச் சிறிய, நுட்பமான என்று பொருள்படுகிறது. சித்தர்கள் மருத்துவம், வானியல், கணக்கியல், உடற்கூற்றியல், அணுவியல், பேரண்டத் தோற்றம் குறித்து சித்தர் இலக்கியப் பாடல்களில் விளக்கியுள்ளனர். உயிர் - மெய்ப் புனலில், 'கடவுள்' ஆகிறது. 'கடவுள்' என்ற சொல்லுக்கு மனித தன்மையில் உயர்நிலையடைந்த 'பெரியோர்' ஆவர். சித்தர்கள் தன்னையறிந்து உணர்ந்தவர்கள் ஆவார். சித்தர்கள் கடவுளையும் பகுத்தறிவு கேள்விக்கு உட்படுத்தினார்கள். அதனை 'கடவுள் தத்துவம்' என்றே பகுத்துப் பார்த்தனர். 'காற்றே கடவுள், ஒளியே கடவுள், ஒருவனே கடவுள், அன்பே கடவுள், அறிவே கடவுள், அம்மையப்பனே கடவுள்' என்று சித்தர் பாடல்கள் வழியாக பேருண்மைகளை அறிவியல் தன்மையில் அறியமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. கோவிந்தன். தா., (தொ.) சித்தர் பாடல்கள் (2000) பாவை பப்ளிகேஷன்ஸ் : சென்னை,
2. கோவிந்தன். தா., (பதி.) சித்தர் பாடல்கள் (2010) பூம்புகார் : சென்னை.
3. Santha kumar., Y. Historical And Dialectical Analysis Of Pathinen Siddhar Literature (Ph.D. Thesis – 2019) Bharathidasan University, Tiruchirappalli. "The philosophy of God" (P.P. 174 – 186).
4. வேலுசாமி. துரை., சித்த மருத்துவ அகராதி – ஒரு கண்ணோட்டம், (2024) மணிமேகலைப் பிரசுரம் : சென்னை.